# மான்மின் செய்திகள்

# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com


# வசனத்தில் உள்ள மெய்யான ஆசீர்வாதத்தையும் சந்தோஷத்தையும் நோக்கிப் பார்ப்போம்

## அறிவர். ஜேராக் லீ அவர்களின் புத்தகங்கள் மாற்றத்தையும் ஜீவனையும் கொண்டுவருகின்றன




இடதிலிருந்து, கண்காணி டொங்மின் சியோ, கண்காணி லோப்ஹோ கமுஹான்டா டிசையரும் அவர் மனைவியும் (DR காங்கோ), போதகர் டேக்யோ மூன், சகோதரி பிளசி (இந்தியா), சகோதரி ஹான்சென் (ஃபரோ தீவுகள்) மற்றும் மூத்த கண்காணியை டேயங் கிம் (இவர்கள் தேவனுடைய அன்பை உணர்ந்தனர்; இவர்களின் வாழ்க்கை அறிவர். ஜேராக் லீ அவர்களின் புத்தகங்கள் மூலமாக புதுப்பிக்கப்பட்டுள்ளது)

ஃபரோ தீவுகளில் வசிக்கும் சகோதரி மைபிரிண்ட் வெயித் ஹான்சன் சொன்னதாவது, ''நான் எதற்காக வாழ்ந்தேன் என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் அறிவர். லீ அவர்களின் புத்தகங்கள் வாயிலாக நான் நீதி, உண்மை மற்றும் ஆவிக்குரிய உலகத்தைக் குறித்து கற்றுக் கொண்டேன். வேதாகமத்தை வாசிக்கையில் எனக்குள் இருந்த அநேக கேள்விகள் தீர்க்கப்பட்டன; நான் ஆவிக்குரிய நுண்ணறிவையும் பெற்றுக்கொண்டேன். ஆவிக்குரிய மண்டலம், பரலோகம் பற்றி கற்றுக்கொண்ட பிறகு, என்னுடைய இருதயம் மிகவும் சமாதானமாக மாறியது.''

அவள் பிறவியிலிருந்து காதுகேளாதவள். அவள் அனைத்து வகையான ஆராதனைகளிலும், தானி–யேல் ஜெபக்கூடுகையிலும் சைகை முறையிலான காணொளி வலைத்தளம் வழியாக பங்குபெறுகிறாள். கூடுதலாக, அறிவர். லீ அவர்களின் வல்லமையான ஜெபத்தின் வாயிலாக, அவளுடைய செவிகள் திறந்தது; அவளால் கேட்க முடிகிறது (படம் 5).

அறிவர். ஜேராக் லீ அவர்களின் புத்தகமான *சிலுவையின் செய்தி* ஜனநாயக குடியரசான காங்கோவில் உள்ள கின்ஷாசா மான்மின் சபையின் லோப்ஹோ கமுஹாண்டா டிசையர் என்ற சகோதரரின் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அவர் சொன்னது, ''இந்தப் புத்தகம் அற்புதமானது, காரணம் ஒருவரும் மறுக்கக் கூடாதபடிக்குத் தெளிவாக ஏன் இயேசு கிறிஸ்து மட்டுமே நம்முடைய ஒரே இரட்சகர் என்பதை அது விவரிக்கிறது. மான்மின் மத்திய சபையைப் பற்றி எனக்கு இருந்த கேள்விகள் அனைத்திற்கும் பதிலைப் பெற்றேன். அறிவர். ஜேராக் லீ ஒரு உண்மையான தேவனுடைய தாசன் என்பதை நான் முடிவாக சொல்கிறேன்.''

இந்தக் காரியங்களே அவரை கின்ஷாசா மான்மின் சபையில் அவருடைய மனைவியோடு பதிவு செய்யும் படியாக நடத்தியது. அவர் சபையின் ஒரு உறுப்பினராய் மாறிய பிறகு, அவரிடத்தில் அநேக மாற்றங்கள் ஏற்பட்டன. பொருளாதார கஷ்டங்களில் இருந்த அவருக்கு, சில பிரச்சனைகளும் இருந்தன. ஆனால் அவர் வசனத்தின் மூலம் விசுவாசத்தைப் பெற்றுக் கொண்டார், மேலும் ஜெபித்தார். அவர் இப்படியாக செய்ததால் ஒரு இராணுவ துணைத் தளபதி என்னும் தரத்திற்கு பதவி உயர்வைப் பெற்றுக் கொண்டார். அவருடைய மனைவியும் ஒவ்வொரு நாளும் ஜெபிக்கத் துவங்கினாள். அவருடைய குடும்பம் இரட்சிப்பின் மகிழ்ச்சியினாலும், பரலோகத் திற்கான நம்பிக்கையினாலும் நிரப்பப்பட்டது (படம் 2).

அறிவர். லீ அவர்களின் *அன்பு : நியாயப் பிரமாணத்தின் நிறைவேறுதல்* என்னும் புத்தகம் 1 கொரிந்தியர் 13வது அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ள ஆவிக்குரிய அன்பை விவரிக்கிறது. மான்மின் மத்திய சபையின் கண்காணி டொங்மின் சியோ இந்தப் புத்தகத்தை இருபது முறை வாசித்துவிட்டார். அவர் கூறியது, ''நான் அறிவாக வைத்திருந்த தேவனுடைய வார்த்தையானது எனக்குள் அன்பாக வந்தது. என் உதடுகள், இதயம் மற்றும் சிந்தை சத்தியமற்றவற்றிற்கு நேராக சாயும்போதெல்லாம், அந்தப் புத்தகத்தில் உள்ள செய்திகள் இயற்கையாகவே என்னுடைய நினைவிற்கு வருகின்றன. நான் சத்தியமற்ற காரியங்களை நினைப்பதை நிறுத்தி விட்டேன். அதற்கு எவ்வளவு நன்றி செலுத்தவேண்டும்! நான் ஆவிக்குரிய வளர்ச்சி எனும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டேன்'' (படம் 1).

அறிவர். லீ அவர்களின் 100வது புத்தகமான *தேவனுடைய சிநேகிதன் ஆபிரகாம்* விசுவாசிகளுக்கு ஒரு ஆசானைப் போல இருக்கிறது. காரணம், அவர்கள் விசுவாசத்தின் முற்பிதாவான ஆபிரகாமின் விசுவாச படிகளைப் பின்பற்ற முடிகிறது.

ஜனவரி 4, 2016 அன்று, தேவனுடைய சிநேகிதன் ஆபிரகாம் புத்தக விமர்சன போட்டியின் பரிசளிப்பு விழா நடைபெற்றது. மிர்யாங் மான்மின் சபையின் போதகர் டேக்யோ மூன் முதல் பரிசைப் பெற்றுக் கொண்டார். அவர் சொன்னது, ''நான் புத்தகத்தைப் படித்த பிறகு, முன்பு நான் அனுபவித்த சூழ்நிலையை தற்போது மறுபடியும் சந்திக்கும்போது தேவனை எது பிரியப்படுத்தும் என ஆழ்ந்து சிந்திக்கிறேன். அந்தப் புத்தகத்தின் சம்பவங்கள் என்னுடைய இதயத்தில் பதிந்துள்ளன. அவை என் வாழ்க்கையை பிரதிபலித்து காட்டும் கண்ணாடியைப் போல செயல்புரிகின்றன. நான் ஜெபிக்கையில், என் ஊழியத்தை செய்கையில் அந்தப் புத்தகத்தின் செய்திகளை நடைமுறைப்படுத்துகிறேன். நான் மிகவும் உற்சாகத்தில் இருக்கிறேன்'' (படம் 3).

க்கூமி மான்மின் சபையின் மூப்பர் சியோக்ச்சியோல் லீ வெள்ளிப் பரிசை வென்றார். அவர் கூறியது, ''நம் அன்றாட வாழ்வில் உள்ள பாடங்கள் ஆவிக்குரிய ஆடைகளாக அந்தப் புத்தகத்தில் 'உடுக்கப்–பட்டிருக்கின்றன.' அவை அனைத்தும் ஆவிக்குரிய உணர்த்துதலோடு நம்மிடத்தில் வருகின்றன. அது ஒரு அறிவொளியூட்டும் சம்பவங்களடங்கியது. அநேக மக்கள் விசுவாசம், கீழ்ப்படிதல், பயபக்தி மற்றும் நன்றியை குறித்து இந்தப் புத்தகத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என நான் விரும்புகிறேன். அவைகளைப் பற்றி அநேக மக்கள் கற்றுக் கொள்வதின் மூலம் உலகமானது அமைதி மற்றும் இரக்கத்தால் நிறையும் என நான் நம்புகிறேன்.''

அறிவர். ஜேராக் லீ அவர்களால் எழுதப்பட்ட புத்தகங்களின் வகைகளில் பிரசங்கத் தொடர்கள், கருப்பொருள் பிரசங்கத் தொடர்கள், ஆய்வுப் புத்தகங்கள், சாட்சி தொகுப்புகள், நிரல் தொகுப்புகள் மற்றும் கிறிஸ்தவ கட்டுரைகள் உள்ளடங்கியுள்ளன. 2016 ஜனவரி நிலவரப்படி, கொரிய மொழியில் 100 புத்தகங்களும், இதர 59 மொழிகளில் புத்தகங்களின் 300 தொகுப்புகளும் வெளிவந்துள்ளன.



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

"உன் நீதியை வெளிச்சத்தைப் போலவும், உன் நியாயத்தைப் பட்டப்பகலைப் போலவும் விளங்கப் பண்ணுவார்" (சங்கீதம் 37:6)

# பிதாவின் மகிமையால் நிறைந்த ஆலயம்

யாத்திராகமம் 40ல், மோசேயும் இஸ்ரவேல் புத்திரர்களும் தேவனுக்கு முன்பாக ஆசரிப்புக் கூடாரத்தை ஏறெடுக்கிறதை நாம் பார்க்கிறோம். அப்போது தேவன் தமது மகிமையை ஆசரிப்புக் கூடாரத்தில் வெளிப்படுத்தினார். கர்த்தருடைய மகிமை ஆசரிப்புக் கூடாரத்தை நிரப்பிற்று. மேலும், தேவாலயத்தின் பிரதிஷ்டையையும் தனது ஜெபத்தையும் ராஜாவாகிய சாலொமோன் முடித்த போது, தேவனாகிய கர்த்தர் தமது மகிமையை வெளிப்படுத்தினார். இந்நாளைப் பற்றி என்ன?

## 1. 'தேவனுடைய மகிமையால் நிறைந்திருப்பதின்' அர்த்தம்

### 1) 'தேவனுடைய மகிமையால் நிறைந்திருப்பதின்' அர்த்தம் ஆவி மற்றும் பூரண ஆவியின் கனிகளின் நிறைவு இருக்கும்.

தேவாலயம் என்பது சிருஷ்டிகராகிய தேவன் தமது நாமத்தை வைத்துள்ள இடம். தேவனுக்கு கனமும் துதியும் ஏறெடுக்கிற பரிசுத்த இடமாய் அது இருக்கிறது. அங்குதான் வேதாகமத்திலுள்ள வார்த்தைகளும் பிரகடனப்படுத்தப்பட்டு ஜீவ அப்பமும் அருளப்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, ஆவியாயிருக்கிற தேவன், தம்முடைய பிரசன்னம் செய்து சிருஷ்டியாயிருக்கிற, மனிதர்களோடு பேசுகிற இடமாய் அது இருக்கிறது.

ஆசரிப்புக் கூடாரம் என்பது இப்படிப்பட்ட அர்த்தத்தைக் கொண்டுள்ள தேவாலயத்தின் துவக்கமாயிருந்தது.மேலும் அந்த அர்த்தம் சாலொமோன் தேவாலயத்திலும், செருபாபேலின் தேவாலயத்திலும் தொடரப்பட்டது. ஆனால் இந்த தேவாலயங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன. இருப்பினும், உண்மையான அர்த்தமுடைய தேவாலயத்தை கடைசி காலக் கட்டத்தில் கட்ட வேண்டும் என தேவன் திட்டமிட்டுள்ளார்.

தம்முடைய இழந்துப் போன சாயலை திரும்ப பெற்ற அதாவது நற்குணம், அன்பு மற்றும் வெளிச்சமாயிருக்கிற ஆண்டவருடைய இருதயத்தை திரும்பப் பெற்ற தம்முடைய மெய்யான பிள்ளைகளால் ஏறெடுக்கப்படவிருக்கிற தேவாலயத்தை ஏற்றுக் கொள்ள அவர் விரும்புகிறார். நான் இந்த தேவனுடைய அநாதி திட்டத்டதை அறிந்திருக்கிறதாலே, திருச்சபையை திறந்ததிலிருந்து நாம் எல்லா வகையான பொல்லாத சுபாவங்களை களைந்துப் போட வேண்டும். பாவத்திற்கு விரோதமாக இரத்தம் சிந்தப்படத்தக்கதாக போராட வேண்டும் என்றும், ஆவிக்குரிய பூரண ஆவிக்குரிய இருதயத்தைப் பண்படுத்த வேண்டும் என்றும் தொடர்ந்து பிரசங்கித்து வருகிறேன். பாவத்தைக் குறித்து நான் உங்களை எச்சரித்து பரிசுத்தத்தின் முக்கிய பிரசங்கங்களை போதிக்கிறேன். அவையாவன, 'அன்பு அத்தியாயம்,' 'பரிசுத்த ஆவியின் ஒன்பது கனிகள்,' 'பாக்கியங்கள்,' 'விசுவாசத்தின் அளவு' மற்றும் 'ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம்.' ஆனால் சில ஆத்துமாக்கள் ஆவிக்குரிய குருடர்களாய் அல்லது செவிடர்களைப் போல இப்பேர்பட்ட பிரசங்கங்களுக்கு நேராக உணர்வற்றவர்களாய் இருக்கின்றனர்.

இப்பேர்பட்ட ஆத்துமாக்களுக்காக என் இதயம் உடைந்து நான் என் பெலன் அற்றுப்போனேன், ஆனாலும் தொடர்ந்து நான் மீண்டும் மீண்டும் பிரசங்கித்துக் கொண்டே இருக்கிறேன். பின்பு இந்தப் பாதையின் முடிவிலே விலையேறப்பெற்ற கனிகள் எனக்காக காத்திருக்கின்றனர். அக்கனிகள் மேய்ப்பருடைய இருதயத்தை அறிந்து கொண்டு நம்பிக்கையின் மூலம் அவரோடு ஒன்றாகி எனக்குப் பெலனாய் மாறுகிற போதகர்கள், தலைவர்கள் மற்றும் அங்கத்தினர்கள் ஆவார்கள். அவர்கள் தான் ஆவிக்குரிய, பூரண ஆவிக்குரிய கனிகள். இந்த ஆவிக்குரிய மற்றும் பூரண ஆவிக்குரிய மனிதர்கள் மூலமாக, தேவன் இன்னும் பலரை விசுவாசத்தின் கன்மலையை கடக்கச் செய்து ஆவிக்குள்ளாக பூரண ஆவிக்குள்ளாக வழிநடத்துகிறார். இந்த ஓட்டத்தின் மூலமாக "பிதாவின் மகிமையால் நிறைந்த ஆலயம்" அடையப்பெறும்.

### 2) மேய்ப்பரோடு ஒன்றானவர்கள் மூலமாக தேவனுடைய மகிமை பெரிதாய் வெளிப்படும்

சகல ஜனங்களையும் இரட்சிப்புக்கு நேராய் வழிநடத்துவதில் மிக முக்கிய பங்கு வகிப்பதற்கு பரிபூரணமான நம்பிக்கை இருக்க வேண்டும்.

மேய்ப்பரோடு நம்பிக்கையால் ஒன்றாக ஐக்கியப்பட்டிருக்கிறவர்கள் உலகின் ஒவ்வொரு இடங்களுக்குச் செல்வார்கள் என்று விளக்கப்பட்டுள்ளது. இதற்காக தேவன் பல பகுதிகளில் பல சோதனைகளை அனுமதித்தார். நீங்கள் மேய்ப்பரை நேசிக்கிறோம் என்று கூறினீர்கள். மேய்ப்பர் மூலமாக கொடுக்கப்பட்ட கிருபைக்காக நன்றியுள்ளவர்களாயிருந்தீர்கள், அப்படிப்பட்ட உங்களது அறிக்கை நிஜமாவதற்காக, தேவன் நீங்கள் நிறைவேற்ற வேண்டிய நீதியின் அளவை நிறைவேற்றச் செய்துள்ளார். இப்படி செய்வதால், பரிபூரண நம்பிக்கையாலும் அன்பாலும் விளைந்த ஆவி மற்றும் பூரண ஆவியின் கனிகள் தொடர்ந்து முன் விளைந்துக்கொண்டே இருப்பர். தேவனுடைய மகிமைக்காக அவர்கள் தங்களை அர்ப்பணிக்க, அவர் மகிமை முழுஉலகத்திலும் வெளிப்படும்.

ஆபகூக் 2:14 சொல்கிறது போல, "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." உலகமெங்கும் இருக்கிற இரட்சிக்கப்படக்கூடிய எண்ணற்ற ஆத்துமாக்கள் தேவனுடைய மகிமையைக் காண அவரிடம் வருவார்கள். இது தான் பிதாவின் மகிமை நிறைந்திருக்கும் என்பதன் அர்த்தமாகும். அங்கத்தினர்களாகிய உங்கள் மூலம் இந்த காரியங்கள் நடைபெறும்போது, நம்முடைய திருச்சபை பிதாவின் மகிமையால் நிறைந்திருக்கும்.

## 2. பிதாவின் மகிமை குறிப்பாக எப்படி வெளிப்படும்?

### 1) தேவனளித்த கடமையின் மூலமாக நாம் விளைவிக்கிற கனிகளால் அது வெளிப்படும்.

இந்த திருச்சபை 100% மறுசிருஷ்டிப்பின் வல்லமையை அடையப்பெறும்போது, உங்களாலும் என்னாலும் பல ஊழியங்கள் செய்யப்பட வேண்டி உள்ளன. அப்போது பூரண ஆவி மற்றும் ஆவியின் கனிகள் மேய்ப்பருடைய வல்லமையை சுமந்து முன்னணியில் இவ்வூழியத்தில் பங்குப் பெறுவர். அவர்கள் இந்த தேசம் மற்றும் உலக முழுவதிலும் தங்களது பகுதிகளுக்குச் சென்று ஆத்துமாக்களை இரட்சிப்பதில் முன்னணி வகிப்பர்.

அப்போது, பிதாவின் மகிமை யோவான் 15:8ல், "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்" என்று சொல்லப்பட்டதுபோல பெரிதாய் வெளிப்படும். அப்பேர்பட்ட ஊழியம் போதகர்களால் மட்டுமே நிறைவேற்றப்படுவதில்லை. திருச்சபையின், மாவட்ட குழு மற்றும் செல் தலைவர்கள் அல்லது பணித்தளக் குழு மற்றும் சிறுகுழு தலைவர்களும் ஆத்துமாக்களை மட்டுமே பராமரித்துக் கொண்டிராமல், அவர்களும்கூட ஆவி மற்றும் பூரண ஆவியின் கனிகளாக இவ்வூழியத்தில் பங்குப் பெறுவதற்கு முன் வர வேண்டும்.

நீங்கள் ஆவி ஆத்துமா எலும்புகள் மற்றும் ஊண்களைப் பிரிக்கத்தக்கதாக உருவப் பாயும் வார்த்தையின் அதிகாரத்தோடு அவர்கள் சுயாதீனத்தை உடைப்பதால் ஆத்துமாக்களை மாற்ற வேண்டும். கைக்குட்டையோடு நீங்கள் ஜெபிக்கையில், அசுத்த ஆவிகள் விலகிச் செல்கிற, வியாதிகள் சுகமாகிற, வாழ்வின் பிரச்சனைகள் தீர்கிற பரிசுத்த ஆவியின் வல்லமையான கிரியைகள் இருக்க வேண்டும் (அப்போஸ்தலர் 19:11–12).

இப்பேர்பட்ட ஊழியம் முழுவதும் தீவிரமாக செயல்பட பல துறைகளில் உதவிச் செய்யக்கூடிய பணியாளர்களும்கூட இருக்க வேண்டும். சிலர் பிரசங்கியாளர்களுக்குப் பணித்தளத்தில் உதவி செய்ய வேண்டும், இன்னும் சிலர் நிர்வாக வேலைகளைப் பராமரிக்க வேண்டும். மேலும் இன்னும் பிறர் கலைநிகழ்ச்சி குழுவில் அல்லது தொழில் நுட்பத்தில் பணிபுரிய வேண்டியுள்ளது. ஆனால் மிக முக்கியமான காரியம் என்னவென்றால், அவைகளெல்லாம் உதவி செய்யும் வேலைகளாக இருந்தாலும் அவர்கள்கூட இந்த ஊழியத்தை நிறைவேற்றுவதில் ஆவிக்குரிய பூரண ஆவிக்குரிய கனிகளாக வேண்டும்.

உதாரணமாக, துதிபாடல் மற்றும் கலை நிகழ்ச்சியின் மூலமாக கிருபை திருச்சபையினர் மீது இறங்கி வருமானால், அவர்கள் மனந்திரும்புதலுக்குள்ளாக வருவார்கள். இருளின் வல்லமை அவர்களை விட்டு விலகும். TV குழுவினரும்கூட தேவனுடைய வல்லமை மற்றும் அதிகாரம் நிறைந்த நிகழ்ச்சிகளை உருவாக்கலாம், அதனால் எண்ணற்ற ஆத்துமாக்கள் விழித்தெழும்பி வாழ்வுக்கும் மாற்றத்திற்கும் நேராக கடந்து வருவார்கள்.

நிர்வாக துறையினருக்கும் அதுபொருந்தும். பொருளாதாரம், அறிவுத் தொழிற்நுட்பம் மற்றும் பல நிர்வாக வேலைகளைச் செய்கிற பிற துறைகளும் நமக்கு உண்டு. அவர்கள் தேவனுடைய வல்லமையைப் பெற்றால், அவர்கள் பரம ஞானத்தைப் பெற்று, சிறந்த வழிக்கு நடத்தப்படுவர்.

### 2) உலகின் உப்பாகவும் வெளிச்சமாகவும் நமது நற்கிரியைகள் மூலமாக அது வெளிப்படும்.

நீங்கள் ஆவிக்குரிய பூரண ஆவிக்குரிய கனியாக முன் வந்தால் 1 கொரிந்தியர் 10:31ல் சொல்லப்பட்டது போல எல்லாவற்றிலும் நீங்கள் தேவனுக்கு மகிமை செலுத்துவீர்கள். மேலும், நீங்கள் மத்தேயு 5:16ல் உள்ளதுபோல உங்கள் நற்கிரியைகளுடன் கிறிஸ்துவின் வாசனையையும் வெளிச்சத்தையும் கொடுப்பீர்கள். அப்போது தேவனுடைய மகிமை உங்கள்மூலம் வெளிப்படும், மான்மினின் நாமம் உயர்த்தப்படும், பல மக்கள் நம்முடைய திருச்சபைக்கு கடந்து வருவார்கள்.

மாபெரும் ஆலயத்தின் கட்டுமானமே மனிதப் பண்படுத்துதலின் வரலாற்றில் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிற மாபெரும் கனியாக இருக்கும். மேலும் நாம் மாபெரும் ஆலயத்தை கட்டுகிற நேரத்தில்தானே, தேவனுடைய மகிமை ஆவிக்குரிய மற்றும் பூரண ஆவிக்குரிய கனியாக மாறிய உங்கள் மூலமாக வித்தியாசமான பல இடங்களில் நிரம்பியிருக்கும். இப்பேர்பட்ட கனிகள் கூடி தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிற தேவாலயமே மாபெரும் ஆலயம். அதனால், இந்த மாபெரும் ஆலயம் தானே தேவ மகிமை நிறைந்ததாக இருக்கும். மேலும் அதில் கூடி வருகிற உங்களாலும் அப்படி இருக்கும்.

உதாரணமாக ஒலிம்பிக் விளையாட்டில் ஒரு விளையாட்டு வீரர் தங்கப் பதக்கம் வென்றார் என வைத்துக் கொள்வோம். அது தனிப்பட்ட முறையில் அவருக்கு மாத்திரம் கவுரவமாக காணப்படாமல், அந்த மகிமை அவர் தேசத்திற்கும் கொடுக்கப்படுகிறது. இந்த தேசத்தின் நாமமும் உயர்த்தப்படும். அதிக அளவான தங்கப் பதக்கங்களைப் பெறுகிற தேசம் தான் மிகப் பெரிதான கனத்தைப் பெறும். அதுபோலவே நீங்கள் சோதனைகளின் வழியாக சுத்தப் பொன்னாக மாறி உலகமெங்கிலும் தேவ மகிமையை வெளிப்படும்போது, இந்த திருச்சபையும் தனிப்பட்ட முறையில் நீங்களும் மகிமையையும் வெகுமதிகளையும் பெறுவீர்கள்.

தேவன் தனிப்பட்ட முறையில் உங்களுக்கும் முழுமையுமாக மான்மின் திருச்சபைக்கும் மாமகிமையையும் வெகுமதிகளையும் பிதாவின் மகிமையுடன் நிறைந்திருக்கும் ஆலயத்தின் மூலமாக கொடுக்க விரும்புகிறார்.

2016ல் உங்கள் மூலமாகவும் மான்மின் என்ற இத்திருச்சபை மூலமாகவும் பிதாவினுடைய மகிமையால் நிறைந்திருக்கும் ஆலயம் வெளிப்படும். ஆலயத்தின் கட்டுமானப்பணி அருகில் நெருங்கி வரும்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இந்தக் கடைசி காலத்தில் தேவ மகிமை மாபெரும் ஆலயக் கட்டுமானத்தின் மூலமாகவும், ஆவி மற்றும் பூரண ஆவிக்குரிய கனிகள் மூலமாகவும் மாபெரிதாய் வெளிப்படும் (சங்கீதம் 37:6). அந்த நாளின் மகிமையை நாம் அனைவரும் சேர்ந்து அனுபவிக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். இப்படிச் செய்வதால் மிகுந்த அழகு நிறைந்த புது எருசலேமில் நாம் அனைவரும் சேர்ந்து இருக்க வேண்டும் என ஆண்டவருடைய நாமத்தினால் நான் ஜெபிக்கிறேன்.

**விசுவாசத்தின் அறிக்கை**

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]..." [அப். 17:25]
"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" [அப். 4:12]



# கிறிஸ்தவ வாழ்வு வாழ்வதை எவ்வாறு சுலபமாக்கலாம்

நாம் மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் போது தேவன் உதவியாளராய் பரிசுத்த ஆவியை நமக்குத் தருகிறார். அதனால் நாம் விசுவாசம் கொண்டு இரட்சிப்பையும் நித்திய ஜீவனையும் பெற்று சந்தோஷத்தால் நிறைந்த பரலோகத்திற்குள் நுழைய முடியும். நாம் பரிசுத்த ஆவியின் உதவியைப் பெறும்போது, தேவனுடைய வார்த்தையின்படி செயல்படுவதும், ஒரு கிறிஸ்தவ வாழ்வு நடத்துவதும் சுலபமாகிவிடும்.

முதல் மனிதனாகிய ஆதாம் பாவம் செய்ததால் இழந்துப்போன தேவ சாயலை யாரானாலும் திரும்பப் பெறலாம். மேலும் நம்முடைய இரட்சகராய் இருக்கிற ஆண்டவருடைய இருதயத்தை அடையப்பெற்று விசுவாசத்தின் பூரண நிச்சயமுள்ள உண்மையுள்ள இருதயத்தை அடைய முடியும் (எபிரெயர் 10:22). ஜீவனுக்குப் போகிற வாசல் சிறியதும் வழி இடுக்கமுமாயிருப்பது உண்மைத்தான் (மத்தேயு 7:14). ஆனால் அந்த வாசலை கடப்பதற்கு எளிமையான வழிகள் உள்ளன.

உபாகமம் 30:11–14 கூட, “நான் இன்று உனக்கு விதிக்கிற கட்டளை உனக்கு மறைபொருளும் அல்ல, அது உனக்குத் தூரமானதும் அல்ல... நீ அந்த வார்த்தையின்படியே செய்யும் பொருட்டு, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது” என்று வாசிக்கிறோம். இந்த ஆசீர்வாதத்தின் ஆண்டில், மிகவும் மகிமை நிறைந்த பரம வாசஸ்தலமான புது எருசலேமுக்கு அருகில் நாம் செல்வோம்.

## முதலாவது, நமக்குத் தெளிவான இலக்கு இருக்க வேண்டும்

தேவன் ஜீவிக்கிறார், பரலோக இராஜ்ஜியம் நிச்சயமாக இருக்கிறது. இந்தப் பூமியிலே நாம் செய்ததற்கேற்ப தேவன் நமக்கு கைமாறு அளிப்பார். இந்த இலக்கு என்பது ஏதோ ஒன்றுமில்லாதது அல்ல. தேவன் நமக்கு கற்பித்த வழியை நாம் பின்பற்றினாலே, நாம் நிச்சயமாக இந்த இலக்கை அடைவோம். உதாரணமாக, விற்பனை செய்யும் நபர், பகல் இரவாக தங்கள் இலக்கை அடைவதற்காக வேலை செய்வார். அவர்கள் புறக்கணிக்கப்பட்டு அடிக்கடி இகழுகிற வார்த்தைகளை கேட்டாலும்கூட, அவர்கள் தங்கள் சிறப்பை செய்வர். இதன் காரணம் அவர்களுக்குத் தெளிவான இலக்கு இருக்கிறது. மேலும் இந்த இலக்கை அடைவதால் அவர்கள் என்னப் பெறுவார்களோ அதற்காக நம்பிக்கையும் இருப்பதாலும்கூட அப்படிச் செய்கின்றனர்.

மேலும், நமது இலக்கு பரலோகத்தின் மிகச் சிறந்த மகிமையான வாசஸ்தலமான புது எருசலேம். இந்த தெளிவான இலக்கு நமக்கு இருக்குமாயின், தேவனுடைய கட்டளைகளை கைக்கொள்வது நமக்கு கடினமாயிராது. இங்கு, மிக முக்கியமான காரியம் விசுவாசமாகும். நம்மைப் பரலோகத்திற்கு வழிநடத்துவதற்கு தமது ஜீவனையும் தியாகம் செய்த ஆண்டவருடைய அன்புக்காக நன்றியுடன் படிப்படியாக நாம் செல்லும்போது, நாம் இலக்கை அடைவோம். புதிய எருசலேமை அடைவதற்குப் பின்நோக்காமல் முன்னேறி செல்வது மிக முக்கியம்.

## இரண்டாவதாக, நாம் இலக்கை நோக்கி மாறாமல் செல்ல வேண்டும்

கிறிஸ்தவ வாழ்வில் மாறுகிற மனநிலை மிகப் பெரிதான தடை. நாம் ஒரு இலக்கை நிர்ணயித்தால், மாறாத மனநிலையோடு நாம் அதிலே செயல்பட வேண்டும். நாம் விட்டுவிடாமல் மாறாத மனநிலையோடு இருக்கும்போது, கிறிஸ்தவ வாழ்வு நடத்துவதற்கு ஒரு போதும் அது கடினம் இல்லை என்பதை நாம் கண்டறிவோம்.

ஒருவேளை மலை ஏறுபவர், அவர் பாதியிலே ஓய்வு எடுக்க விரும்புகிறார் அல்லது அவர் திரும்பக் கீழே போய்விட விரும்புகிறார் என்றால், பின்பு அந்த கனப்பொழுதிலிருந்து அவர் அது கஷ்டம் என உணருவார். மாறாக, இலக்கை நோக்கி செல்பவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் எதுவும் கஷ்டம் என நினைக்கமாட்டார்கள்.

பரலோகத்தில் உங்கள் நம்பிக்கையை வைத்து புது எருசலேமை உங்கள் இலக்காக நிர்ணயிப்பீர்களேயானால், ஊக்கமாக ஆண்டவருடைய இருதயத்தை அடையப்பெறுவதற்கு, நீங்கள் சத்தியமற்ற காரியங்களை இயல்பாகவே களைந்துப்போட முயற்சிப்பீர்கள். மாறாக, நீங்கள் உலக காரியங்களால் சோதிக்கப்பட்ட அவைகளை நாடுவீர்களானால், சத்தியத்தில் வாழ்வதற்கு கஷ்டமாக நீங்கள் உணருவீர்கள். அல்லது நீங்கள் பாதியில் விட்டுவிட விரும்பினால் அல்லது மாறுகிற மனநிலை இருந்தால், நீங்கள் உங்களது கிறிஸ்தவ வாழ்வு கடினமாக இருக்கிறதை காண்பீர்கள். இப்பேர்பட்ட இருதயத்தை களைந்துப்போட்டு வார்த்தைக்கு கீழ்ப்படிந்தால், நீங்கள் உங்களது கிறிஸ்தவ வாழ்வை தேவனுடைய தேற்றுதலிலும் மகிழ்ச்சியிலும் சந்தோஷமாக நிர்வாகிக்கக்கூடும்.

வேறு வார்த்தையில், இந்த மாறுகிற மனநிலையை நாம் அகற்றிவிட்ட உடனே நாம் விசுவாச வாழ்வு நடத்துவதற்கு அது மிக எளிமையாகி விடும். மேலும், நாம் மற்ற சத்தியமற்ற சுபாவங்களையும்கூட அதிசுலபமாக களைந்துப் போட முடியும். நாம் எந்தளவாய் தேவனுடைய வார்த்தையை முயற்சித்து அதிலே நடக்கிறோமோ அந்தளவாய் நாம் புது எருசலேம் நுழைவதற்கு தகுதியைத் தீவிரமாக நாம் பெற முடியும். மாறுகிற மனநிலையையும் விட்டுவிட வேண்டும் என்ற ஆசையையும் நாம் களைந்துப்போட்டால் நாம் பரத்திலிருந்து வல்லமையையும் பெலனையும் பெற முடியும். இப்படிச் செய்வதால், நாம் தீவிரமாக புதுப்பிக்கப்பட்ட கனியாக விளையக்கூடும்.

## மூன்றாவதாக, இலக்கை நோக்கி செல்கையில் நாம் சந்தோஷமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும்

மக்கள் மலை ஏறுவதற்கு கடினமாயிருந்தாலும் அதில் ஏறுவதற்கு காரணம், அநேகமாக மலை ஏறியப் பின்பு அவர்கள் அடையும் சந்தோஷத்திற்காகதான். நாம் கிறிஸ்துவில் விசுவாச வாழ்வு நடத்துகையில், நாம் இறுதியாக புது எருசலேம் போய் சேர்வோம். அந்த இலக்கை அடையப்பெறுவது மிகவும் சந்தோஷமும் மகிழ்ச்சியுமானது. ஆனால் உங்களில் சிலர் உங்கள் கிறிஸ்தவ வாழ்வில் குறைவுகளை கண்டறியும்போது அது கடினம் என்று உணருவதாக கூறுகிறீர்கள். சிலர் அவைகளை களைந்துப்போட விருப்பம் இல்லை என்பதாக நினைக்கலாம். இருப்பினும், சத்தியமற்ற காரியங்களை கண்டறிவதால் நாம் புது எருசலேமின் இலக்குக்கு நெருங்கிச் செல்வதை நாம் விசுவாசித்தால் நாம் சந்தோஷமாக அவைகளை கண்டறிந்து அவைகளை களைந்துப்போட முடியும்.

உதாரணமாக, நீங்கள் மலை ஏறுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் மிக பலுவான சுமை பையை முதுகில் கொண்டு செல்கிறீர்கள். உங்களது சுமை பை அதிகப் பலுவாகிறதை உணரும்போது, நீங்கள் உங்களது சுமை பையை திறந்து அதில் தேவையில்லாத பல காரியங்கள் உள்ளதெனக் காண்கிறீர்கள். அப்போது நீங்கள் அவைகளை தூக்கி எறிந்துவிடுவீர்கள் அல்லவா. ஒருபோதும் “நான் இவைகளை வைத்துக்கொள்ள விரும்புகிறேன்” என்று சொல்லமாட்டீர்கள். கூடுமான அளவில் தேவையில்லாதவைகளை தூக்கி எறிய நீங்கள் முயற்சிப்பீர்கள். அதே போலவே தான் நீங்கள் உங்களது கிறிஸ்தவ வாழ்வில் குறைவுகளை கண்டறிந்து அவைகளை களைந்துப் போடுவது ஆகும். அப்பேர்பட்ட காரியங்களை எந்த அளவு அதிகம் களைந்துப்போடுகிறீர்களோ, அந்த அளவு அதிகம் நீங்கள் சந்தோஷமாவீர்கள். உங்களது கிறிஸ்தவ வாழ்வை நீங்கள் நிர்வாகிப்பதற்கு அதிக சுலபத்தைக் காண்பீர்கள்.

நமக்காக தேவனுடைய அன்பை உண்மையில் நாம் விசுவாசித்தால் பாவங்களை கண்டறிந்து அவைகளைக் களைந்துப் போடுவது கஷ்டமானதாக இருக்காது. விசுவாசத்தின் சோதனைகள் வழியாக நாம் செல்ல வேண்டியதானாலும்கூட, நாம் நமது இருதயங்களில் மகிழ்ச்சியையும் ஸ்தோத்திரங்களையும் ஒருபோதும் இழந்துப்போக மாட்டோம். இப்போது உங்களது கிறிஸ்தவ வாழ்வை நடத்த கஷ்டமானதாக இருக்கிறது என்பதை காண்பீர்களானால், நீங்கள் உலகத்தை நோக்கி இப்போது பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை உணர்ந்து உங்களது மனநிலையை “விசுவாச வாழ்வு நடத்துவது மிக சுலபமும் சந்தோஷமுமானது” என்று நினைத்து அதைச் சரி செய்து கொள்ளவும், நிச்சயமாக மிகவும் மகிமை நிறைந்த பரம வாசஸ்தலமான புது எருசலேம் இடம் இருக்கிறது. இந்தத் தெளிவான இலக்கை நீங்கள் உடையவராக இருப்பின், நீங்கள் பாதியில் விட்டுவிட மாட்டீர்கள், மாறவும் மாட்டீர்கள். உங்களில் யாரானாலும் சந்தோஷமான மகிழ்ச்சி நிறைந்த கிறிஸ்தவ வாழ்வை நடத்தி தேவனுடைய மகிமையில் நீங்கள் வாசம் செய்வீர்கள்.

# "கடந்த 17 வருடங்களாக என் வலது கண்ணில் பார்வையை இழந்திருந்த என்னால் பார்க்க முடிகிறது"

**சகோதரர் பாப்பு குமார் தாஸ், வயது 25, டெல்லி மான்மின் சபை, இந்தியா**

நான் எட்டு வயதாக இருந்தபோது, என்னுடைய பாட்டியின் சோளம் வயல் வழியாக கடந்துச்சென்றேன். அப்பொழுது சோளத்தின் ஒரு இலையின் ஓர் கூர்மையான பகுதி என் கண்ணுக்குள் சிக்கிக் கொண்டது.

நான் என் பெற்றோர்களுடன் அவசரமாக மருத்துவ மனைக்குச் சென்றேன். என்னுடைய மருத்துவர் விரைவில் நான் அறுவைச் சிகிச்சை செய்தாக வேண்டும் என்று சொன்னார். அறுவைச் சிகிச்சையின் மூலமாக என் கண்ணில் இருந்து கூர்மையான பகுதி எடுக்கப்பட்டது, எனினும் கண் வழியாக பொருள்களெல்லாம் மங்கியதாகவே புலப்பட்டன; நான் மிகச் சீக்கிரத்தில் என்னுடைய அந்தக் கண்ணில் குருடனாகி விட்டேன். என் பார்வைத் திறனை புதுப்பிக்க நான் பல வழிகளில் முயற்சித்தேன், ஆனால் அதனால் எவ்வித பயனும் ஏற்படவில்லை.

நான் பன்னிரெண்டு வயதானபோது, கருவிழி மாற்று அறுவைச் சிகிச்சை மற்றும் வேறு இரண்டு அறுவைச் சிகிச்சையை செய்தும் எதுவும் நடைபெறவில்லை. மருத்துவர்கள் என்னிடம் இனி செய்யக்கூடிய சிகிச்சை என எதுவுமில்லை என்று கூறிவிட்டனர். என் வலது கண் பார்வையை இழந்தப் பின் ஏதோ விசித்திரமாக தோன்றத் தொடங்கியது. என்னுடைய நண்பர்கள் என்னை கிண்டல் செய்தனர், என் கண்ணைப் பார்த்து கேலி செய்தனர், அதனால் நான் எப்பொழுதும் துக்கத்தில் அழுதுக் கொண்டிருந்தேன். நான் நம்பிக்கையிழந்தவனாக, மற்றவர்களால் கைவிடப்பட்டவனாக இருந்தேன்.




▲ சகோதரர் பாப்பு தன் வலது கண்ணில் பார்வைத்திறனை இழந்ததால் ஒரு சந்தோஷமற்ற குழந்தைப் பருவத்தை கழித்தார். ஆனால் அவரின் மரித்தப் பார்வை நரம்புகளை மறுபடியும் உயிர்ப்பித்த தேவனுடைய வல்லமையை அனுபவித்த அவர் நன்றியோடு மகிழ்ச்சியோடு சந்தோஷமான தருணங்களை அனுபவிக்கிறார்.

நான் நம்பிக்கையற்ற எதிர்காலத்தை நினைக்கையில் என் இதயத்தில் சோர்வை உணர்ந்தேன். இதற்கிடையில், என் உறவினர் "தேவனுடைய வல்லமை" என்ற குறுந்தகட்டை என்னிடம் கொடுத்துவிட்டு, ஒரு வல்லமையான போதகரின் ஜெபத்தைப் பெற்றால் நான் குணமாக முடியும் என்று கூறினார். அந்த குறுந்தகட்டில் அநேக மக்களுடைய குணமான சாட்சிகள் தொகுக்கப்பட்டிருந்தன. அவர்கள் குணமாகாத வியாதிகளோடிருந்தனர், ஆனால் அவர்கள் அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய ஜெபத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு தங்களுடைய வியாதிகளிலிருந்து குணமானார்கள்.

குணமாகும் தளர்ந்த நம்பிக்கையோடு நான் டெல்லி மான்மின் சபையில் நவம்பர் 2014 முதல் பங்கு பெறத் தொடங்கினேன். GCN தொலைக்காட்சி வாயிலாக அறிவர். லீ அவர்களின் ஜெபத்தை நான் செய்திக்குப் பிறகு பெற்றுக்கொண்டேன். அதுவரை என் வலது கண்ணில் இருந்த வலி குறைந்தது, என் கண் மூலமாக வண்ணமயமான சில பொருட்களை என்னால் பார்க்க முடிந்தது. ஆனால் அதுவும் தற்காலிகமாகதான். அந்த நேரத்தில் நான் தேவனுடைய வார்த்தையின்படி வாழவில்லை, பதில்களை எவ்வாறு பெறுவது என்றும் எனக்குத் தெரியாது. ஆனால் என்னைப் போன்ற இப்படிப்பட்ட நபருக்கும் சிருஷ்டிகராகிய தேவனுடைய வல்லமையை சில தருணங்கள் அனுபவிக்கும்படிக்கு அவர் என்னை நடத்தினார்.

அதன்பிறகு, நான் குணமடைவேன் எனும் உறுதியைப் பெற்றேன்; தேவனுடைய சித்தத்தை பின்பற்றத் தொடங்கினேன். செய்திகள் வாயிலாக குணமடைவதற்கு என் விசுவாசத்தை எப்படி காண்பிப்பது என்று நான் கற்றுக் கொண்டேன். என்னுடைய அலைபேசியில் பதித்திருந்த வியாதியஸ்தர்களுக்கான ஜெபத்தை ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும் பெற்றுக்கொண்டேன். மேலும் நான் ஒரு வேளை உபவாச ஜெபத்தை 40 நாட்களுக்கு ஏறெடுத்தேன். நான் தேவனுடைய வார்த்தையின்படி வாழ்வதற்கு முயற்சித்தேன்.

2015 நவம்பரில், மான்மின் உலக வழிநடத்தும் போதகர், உயர்திரு. ஹீசன் லீ அவர்கள் எங்கள் சபையின் 3வது ஆண்டுவிழா ஆராதனையை நடத்தும்படி வந்திருந்தார். செய்திக்குப் பிறகு அவர், அறிவர். லீ அவர்கள் ஜெபித்துக் கொடுத்த கைக்குட்டையை வைத்து ஜெபித்தார்கள். அப்போது ஒரு அற்புதம் என்னில் நிகழ்ந்தது!

என் கண்ணிலிருந்த மிகுதியான வலியும், தலைவலியும் நீங்கிப்போயின. கண்ணீர் சொட்டுவதும் நின்றுப்போனது. கூடுதலாக, நான் வண்ணங்களையும் வெளிச்சத்தையும் என் வலது கண் வழியாக பார்த்தறிய துவங்கினேன். என் கண் பார்வைத்திறன் சிறந்த அளவிற்கு மாறத் தொடங்கியது. என்னால் பொருட்களின் உருவங்களை பகுத்தறிய முடிந்தது, எழுத்துக்களைப் படிக்கவும் முடிகிறது. இது எவ்வளவு அதிசயம்!

என் கருவிழியானது வெள்ளையான ஒன்றினால் சூழ்ந்திருந்தது, ஆனால் அது மீண்டும் கறுப்பாக மாறி வருகிறது. நான் மிகவும் சந்தோஷமாக உள்ளேன். தேவனுடைய கிருபைக்காக நான் நன்றியின் இதயத்தோடு என் சபையில் தன்னார்வ வேலைகளைச் செய்கிறேன்; பிறரை இரட்சிப்புக்குள் நடத்த முயற்சிக்கிறேன். நான் ஜீவனுள்ள தேவனுக்கு சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன்.

# "சந்தோஷத்திற்கான திறவுகோல் பரிசுத்த சுவிசேஷமே"

**மூத்த கண்காணியாள் ஹியுன்யி யாங், வயது 54, டேஜியோன் மான்மின் சபை, தென் கொரியா**

நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவள், ஆனால் பரலோகத்திற்கான நம்பிக்கையோ, இரட்சிப்பிற்கான உறுதியோ எனக்கு இல்லை. 1988 ஜூன் மாதத்தில் நான் சீயோலில் உள்ள ஒரு கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்தேன். என் சொந்த ஊரிலே எனக்கு அறிமுகமான ஒருவர் மான்மின் மத்திய சபைக்கு என்னை அழைத்து வந்தார். நான் அறிவர். ஜேராக் லீ அவர்களின் "விசுவாசத்தின் அளவு" எனும் பிரசங்கத்தை கேட்டபொழுது, நான் இரட்சிப்பின் உறுதியையும் பரலோகத்திற்கான நம்பிக்கையையும் பெற்றுக்கொண்டேன்.

அதற்கடுத்த ஆண்டில், மூப்பர் டேயங் பார்க்–ஐ நான் திருமணம் செய்தேன். அவர் வேலை செய்கிற டேஜியோன் பட்டணத்திற்கு நான் குடிபெயர்ந்தேன். ஆனால் நான் மிகுதியான ஆவிக்குரிய தாகத்தோடு இருந்ததால் மறுபடியும் சீயோலுக்கு இடம் பெயர்ந்தேன். 1991 ஆகஸ்டில் டேஜியோன் மான்மின் சபை துவக்கப்பட்டபோது மீண்டும் நான் டேஜியோன் பட்டணத்திற்கு வந்தேன். ஒரு புதுப்பிக்கப்பட்ட கிறிஸ்தவ வாழ்வை வாழத் தொடங்கினேன். அங்கு ஒரு கிளை சபை ஏற்படுத்தப்பட்டதால் மகிழ்ச்சியோடு என்னால் செய்ய முடிந்த அனைத்தையும் செய்தேன், பரிசுத்த ஆவியினால் நிறைந்திருந்தேன்.

நாங்கள் திருமணம் செய்த நாட்களில், என் கணவருடைய பெற்றோருக்கு நாங்கள் சபைக்குச் செல்வது பிடிக்காது. அவர்கள் எங்களிடம் மூதாதையர்களை கவனத்தில் கொள்ளாத ஒரு மேற்கத்திய கலாச்சாரத்தைச் சார்ந்த மதத்தில் நம்பிக்கை வைத்துள்ளீர்களே என்று கூறினார்கள். என் கணவர் மூதாதையர்களின் சடங்குகளுக்கு பணிந்துப் போகாததினால் அவர்கள் தங்கள் வீட்டிற்கு நாங்கள் வரக்கூடாது என்று சொல்லி விட்டனர்.

என் மகன் பிறந்து 100வது நாள் நடந்த விழாவில் ஒரு அதிசயமான சம்பவம் நடைபெற்றது. என் மாமியார் அவன் கொரியாவில் குழந்தை பிறப்பை நிர்வாகிக்கும் கடவுளுக்கு அவன் மரியாதை செலுத்த வேண்டும் என்று சொல்லி அவனுக்கு முன்னே அரிசியை வைத்து, அதில் ஒரு கரண்டியை வைத்தார்கள். உடனடியாக, என் மகன் அலறத் தொடங்கி, கண்ணீர் வடித்து, அதிகமாக நடுங்க ஆரம்பித்தான். அவனை சமாதானப்படுத்த எவ்வளவு முயற்சித்தும் அவன் அழுகையை நிறுத்தவே இல்லை. நான் என் மாமியாரைப் பார்த்து, "தேவன் வெறுப்பதை நீங்கள் செய்து விட்டீர்கள். கரண்டியை எடுத்துவிடுங்கள், நாம் தேவனுக்கு ஒரு ஆராதனையை ஏறெடுப்போம்" என்று கூறினேன்.

அவளும் பயத்துடன் கரண்டியை எடுத்த உடனே என் மகன் அழுகையை நிறுத்தினான், அது எங்களை அதிசயத்திற்குள்ளாகியது. இதைப் பார்த்த அவள் நான் ஏறக்குறைய என் விலையுயர்ந்த பேரனை இழந்துவிட்டதைப் போல நினைக்கிறேன் என்று சொன்னாள். அவன் தேவனுக்குரியவன், ஆகவே நீங்கள் விரும்பும்படி செய்யலாம் என்று கூறிவிட்டாள். அது முதற்கொண்டு நாங்கள் மூதாதையர்களின் சடங்குகளை செய்யவில்லை. என் மாமனாரும், மாமியாரும் கர்த்தரை ஏற்றுக் கொண்டனர். என் கணவருடைய சகோதரர்களும் சபையில் பதிவு செய்தனர், என் குடும்பம் இரட்சிக்கப்பட்டது.

இதற்கிடையில், என் கணவர் மிகுதியான கடன் வாங்கி, தன்னுடைய தொழிலில் பணத்தை முதலீடு செய்ததால் நாங்கள் பொருளாதார பிரச்சனைகளைச் சந்தித்தோம். இந்தக் கஷ்டத்தின் மத்தியில், என் மாமனார் காலஞ்சென்றார், மேலும் என் மாமியார் வியாதிப்பட்டதினால் நான் அவர்களை கவனிக்க வேண்டி இருந்தது. என் மாமியார் கழிவறைச் செல்வதற்கு அவர்களுக்கு உதவி செய்தபோதுதானே நான் என்னைப் பற்றி அறிந்திராத பல தீமைகளை கண்டுகொண்டேன்.

அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய பிரசங்கத்தின் மூலம் கற்றுக்கொண்ட ரூத்தின் நற்குணத்தைப் பெறுவதற்கு நான் முயற்சித்தேன், என் இருதயத்தில் இருந்து அன்பு காட்டி அவளுக்கு சேவை செய்தேன். 2012 டிசம்பரில், என் மாமியார் மரித்துப் போனாள். பிறகு தேவன் என் கணவருக்கு ஒரு தொழிலை ஏற்படுத்திக் கொடுத்து, அவரை ஆசீர்வதித்தார்.

மிகவும் பெரிதான ஆசீர்வாதம் என்னவெனில், 2015ன் முதல் பாதி ஆண்டிலே என்னுடைய இருதயத்தை புதுப்பித்துக்கொள்ள தேவன் எனக்கு கிருபையை தந்தார். தேவன் தந்த வேலைகளைச் செய்தபோது, நான் என் திறமையினால் செய்யக்கூடிய வேலைகளை மட்டும்தான் நான் செய்துக் கொண்டிருக்கிறேன் என்பதை அறிந்து கொண்டேன். இதைக் குறித்து நான் மனந்திரும்பிய பிறகு, நான் மற்றவர்களுடைய நிலையில் என்னை நிறுத்திப் பார்த்து, தேவனுடைய கண்ணோட்டத்தில் வேலை செய்யத் துவங்கினேன்.

தேவனை நான் சார்ந்து கொண்டதால், என் குணாதிசயத்தால் செய்வதற்குக் கடினமான காரியங்களையும்கூட செய்யத் தொடங்கினேன். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை சார்ந்து கொண்டதால் என் யோசனைகளை சாதகமாக மாற்றியிருக்கிறேன். 2015 டிசம்பரில் தேவ கிருபையால் நான் ஆவியின் இருதயத்தை அடையும்படி ஆசீர்வதிக்கப்பட்டேன். அல்லேலூயா!



▲ மூப்பர் டேயங் பார்க், மூத்த கண்காணியாள் ஹியுன்யி யாங், சகோதரர் சங்யோ பார்க்

GCN
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com